**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No.363/2020**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 8 |
| Name (திரு/திருமதி) | : ராஜு |
| Father's Name/ Husband's Name | : ரங்கநாதன் |
| Village & Taluk | : நள்ளான் பிள்ளை பெற்றாள் |
| Calling | : உதவி ஆய்வாளர் |
| Age | : 60 |

**<u>Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.03.2026</u>**

<u>எதிரி ஆஜர்.</u>

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது நள்ளான் பிள்ளை பெற்றாள் கா.நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிசெய்து வருகிறேன். இவ்வழக்கின் விசாரணை அதிகாரியான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ரமேஷ் என்பவரின் கையொப்பமும் எனக்கு நன்கு தெரியும். கடந்த 11.03.2020 அன்று நாள்ளான் பிள்ளை பெற்றாள் கா.நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக திரு. ரமேஷ் ன்பவர் பணியில் இருந்த போது காலை 10.00 மணிக்கு அ.சா.1 சிவமணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண் 36/2020 இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(ii)-ன் கீழ் மு.த.அ பதிவு செய்துள்ளார். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ-4-ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு அவர் அன்றைய தினமே காலை 11.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் நாராயணன், வெங்கடேசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ.5 மற்றும் 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு அன்றைய தினமே காலை 13.30 மணிக்கு பாலப்பாடி மதுபானக்கடை அருகே ராஜேந்திரன் என்பவரின் கரம்பு நிலம் அருகே சுமார் 650 ML கொண்ட Kingfisher பீர் பாட்டில் ஒன்றை சாட்சிகள் நாராணயன் மற்றும் வெங்கடேசன் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியுள்ளார், **மேற்படி பீர் பாட்டில் அ.சா.பொ.1 - ஆகவும் கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு இவ்வழக்கின் சாட்சிகள் சிவமணி, பன்னீர் செல்வம், பழனி, கமலக்கண்ணன், ராமசாமி, கிருஷ்ணன், ராஜசேகர், ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு சம்பவம் உண்மையென தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரி நடராஜன் என்பவரை கடந்த 11.03.2020 அன்று 14.30 மணிக்கு சத்தியமங்கலம் பேருந்து நிறுத்தத்திடம் வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார்.

பின்பு இவ்வழக்கு சொத்தினை பவடிம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். **மேற்படி படிவம் 91 அ.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு அவர் இவ்வழக்கின் விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(ii) –ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இவ்வழக்கில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், இவ்வழக்கின் சாட்சிகளை எனக்கு தெரியாது என்றாலும், அவர்களை நான் இவ்வழக்கு தொடர்பாக விசாரிக்கவில்லை என்றாலும் சரிதான். அ.சா.1 கொடுத்த பொய் புகாரை புலன் விசாரணை அதிகாரி சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும், புலன் விசாரணை அதிகாரி குறிப்பிட்டுள்ளது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும், நான் புலன் விசாரணை அதிகாரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.